1970 ஏப்ரல் 8]

தெற்கு ஆவரங்காடு கிராம அரிசனக் குடியிருப்புகள்.

* 711 வினா—திரு எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தெற்கு ஆவரங்காடு கிராம அரிசன நலக் குடியிருப்புகளுக்குச் சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய வேண்டி 13—9—1968-ல் பொது மக்கள் மகஜர் ஒன்று அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஒட்டப்பிடாரம் கிராமத்தின் சுற்றூராகிய தெற்கு ஆவரங்காடு கிராம அரிசன நலக்குடியிருப்புக்கு, நாகலாபுரம்-தெற்கு ஆவரங்காடு சாலையிலிருந்து தெற்கு ஆவரங்காடுக்கு சாலை அமைத்தல் பொருட்டு, ஒட்டப்பிடாரம் கிராமத்தில் 0·82 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1894-ஆம் ஆண்டு நிலக் கையகப் படுத்தல் சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவாரூர் தொகுதி அரிசனக் குடியிருப்புகளுக்கு நடைபாதைகள்.

* 712 வினா—திரு. பி. எஸ். தனுஷ்கோடி : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் தொகுதியைச் சேர்ந்த அரிசனக் குடியிருப்புகளுக்கு நடைபாதைகள் அமைக்க கோரி இதுவரை எத்தனை மனுக்கள் அரசுக்கு வந்துள்ளன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எட்டு மனுக்கள் வந்துள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவரவர்களே, எட்டு மனுக்கள் எந்தெந்த கிராமங்களிலிருந்து வந்திருக்கின்றன ? அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவைகள் எந்தெந்த கிராமங்களிலிருந்து வந்துள்ளன என்ற தகவல் இல்லை. ஆனால் அவைகளைப் பரிசீலனை செய்யும் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றிப்பு கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மனைகள் வழங்கி, ரோடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதை விட, நேரடியாக அரிசன இலாக்கா மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.